# கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை 2019-2020 ஆம் நிதி ஆண்டு ஆண்டு அறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு சட்டம் 2017-ல் ஆணையிடப்பட்டவாறு கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.487 /கனிமம்/ 2016 நாள் 01.11.2017-இன்படி கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளை பத்திரமானது 01.11.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண் 62/2017, நாள் 17.11.2017-ன்படி கடலூர் மாவட்ட சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | நிர்வாகக் குழு அமைப்பு | மேலாண்மைக்குழு அமைப்பு |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், கடலூர். | மாவட்ட ஆட்சியர், கடலூர். |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர். | மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர். |
| 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கடலூர். | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கடலூர். |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர். | திட்ட இயக்குநர், சுகாதாரப்பணிகள், கடலூர். |
| 5. | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், கடலூர். | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், ஊராட்சிகள் வளர்ச்சி, (PAPD), கடலூர். |
| 6. | முதன்மைக் கல்வி அலுவலர், கடலூர். | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, கடலூர். |
| 7. | மாவட்ட கருவூல அலுவலர், கடலூர். | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், கடலூர். |
| 8. | மாவட்ட சமூக நல அலுவலர், கடலூர். | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியம், கடலூர். |
| 9. | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), கடலூர். | மாவட்ட வன அலுவலர், கடலூர். |
| 10. | முனைவர். T.சுந்தரமூர்த்தி, எம்.எஸ்சி. (வன உயிர் உயிரியல்), பி.எட்., பி.எச்.டி. (விலங்கியல்), உதவி இயக்குநர், சி.ஆர்.பி., சுற்றுச்சூழல் கல்வி மையம், சென்னை. | முதன்மை பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, கடலூர். |
| 11. | - | உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, கடலூர். |

| | | |
|---|---|---|
| 12. | - | மாவட்ட கருவூல அலுவலர், கடலூர். |
| 13. | - | மாவட்ட சமூக நல அலுவலர், கடலூர். |
| 14. | - | துணை இயக்குநர் (பொது சுகாதார மையப் பொறுப்பாளர்) சுகாதாரப்பணிகள், கடலூர். |

2) கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, இந்தியன் வங்கி, கடலூர் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண் 6577395044) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்ணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்டகனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

3) கடலூர் மாவட்டத்தில் ஒரு பெருங்கனிம சுரங்கக் குத்தகை 12.01.2015-க்கு முன்னர் வழங்கப்பட்டதால், அந்த ஒரு பெருங்கனிம குவாரிக்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. 12.01.2015-க்கு பின்னர் பெருங்கனிம குத்தகை ஏதும் வழங்கப்படவில்லை. மேலும் 18 குவாரி குத்தகை உரிமங்களுக்கு, உரிம கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்பட்டு வருகிறது

4) கடலூர் மாவட்டத்தில் 905 கிராம பஞ்சாயத்துகள் சுரங்க பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளது.

5) கடலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.3.2020 வரை ரூ.261,18,96,712/- (ரூபாய் இருநூற்று அறுபத்தொண்று கோடியே பதினெட்டு இலட்சத்து தொன்னூற்று ஆராயிரத்து எழுநூற்று பனிரெண்டு) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. **2019-20** குத்தகைதாரர்களிடம் வசூலிக்கப்பட்ட மாவட்ட அறக்கட்டளை நிதி ரூ.98,69,38,920/- மற்றும் விதிகளை மீறி கனிமங்களை கடத்தி சென்ற வாகனங்கள் பெயரில் உயர் நீதிமன்ற உத்தரவின் பெயரில் வசூலிக்கப்பட்ட மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி ரூ.1,09,60,186/- ஆக மொத்தம் ரூ.99,87,93,702/- மாவட்ட கனிம அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளன.

6) 2019-2020 ஆம் நிதியாண்டில் கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ரூ.34,24,99,612/- மதிப்பிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப்படுத்தும் அமைப்பு | உயர் முன்னுரிமையா / பிறமுன்னுரிமைத் திட்டமா | காசோலை எண் மற்றும் நாள். | செலவிட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | குடிநீர் விநியோகம் | தடுப்பனை கட்டுதல் | 18,00,00,000 | செயற்பொறியாளர், பொ.ப.து, நீ.வ.து, வெள்ளாறு வடிநில கோட்டம், விருத்தாசலம். | உயர்முன்னுரிமைத் திட்டம் | 783912 07.01.2020 | 18,00,00,000 |
| 2. | கல்வி | நாற்காலி, மேசை, அலமாரி மற்றும் இதர பொருட்கள் வாங்கும் பணி | 49,99,612 | முதன்மைக் கல்வி அலுவலர், கடலூர் | உயர்முன்னுரிமைத் திட்டம் | - | - |
| 3. | பாசன வசதி | தடுப்பனை கட்டுதல் | 10,00,00,000 | செயற்பொறியாளர், பொ.ப.து, நீ.வ.து, கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம் | பிறமுன்னுரிமைத் திட்டம் | 783916 13.02.2020 | 10,00,00,000 |
| 4. | பாசன வசதி | பெருமாள் ஏரி மதகுகளுக்கு அடைப்பு பலகை பொருத்தும் பணி | 4,00,00,000 | செயற்பொறியாளர், பொ.ப.து, நீ.வ.து, கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம் | பிறமுன்னுரிமைத் திட்டம் | 783916 13.02.2020 | 4,00,00,000 |
| 5. | உட்கட்டமைப்பு | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | 80,00,000 | ஆணையாளர், விருத்தாசலம் நகராட்சி | பிறமுன்னுரிமைத் திட்டம் | - | - |
| 6. | உட்கட்டமைப்பு | உயர்மின் கோபுர விளக்கு பொருத்தும் பணி | 45,00,000 | உதவி இயக்குநர், பஞ்சாயத்துகள், கடலூர் | பிறமுன்னுரிமைத் திட்டம் | - | - |
| 7. | உட்கட்டமைப்பு | சுற்றுச்சுவர் அமைக்கும் பணி | 50,00,000 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர் | பிறமுன்னுரிமைத் திட்டம் | - | - |
| | | மொத்தம் | 34,24,99,612 | | | - | 32,00,00,000 |

மேற்படி, ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள 7 திட்டங்களுக்கான மொத்த தொகை (ரூ.34,24,99,612/-)- யில் 3 திட்டங்களுக்கான தொகை ரூ. 32,00,00,000/- திட்ட பணிக்காக செலவிடப்பட்டுள்ளது. மேற்படி பணிகளில் ஒன்று முற்றிலும் நிறைவு பெற்று நடைமுறைப்படுத்தும் அமைப்பிடமிருந்து பயன்பாட்டுச்சான்று பெறப்பட்டுள்ளது. மீதம் உள்ள 6 பணிகளும் நடைமுறையில் உள்ளன. மீதமுள்ள திட்ட பணிக்கான தொகை ரூ. 2,24,99,612/- இனிவரும் காலங்களில் திட்டபணிக்களுக்காக செலவழிக்கப்படவுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

2/9/20.

தலைவர்,
கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை /
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கடலூர்.

2/2

31/08/20

31/08/2020